மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கைகளை எடுக்கும் என்று சொல்லுகிறபோது ஏற்கெனவே இருக்கிற எலக்ட்ரிக் ஸ்டாட்டிக் பிரிசிபிட்டேட்டர் போன்றவைகள் எல்லாம் சரியானதாக இல்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மின்னியல் தூசு துடைப்பான்கள் சரியானவை என்று சொன்னார்கள். இதுகுறித்து தக்க நடவடிக்கையை எடுக்க அரசு முன்வரும்.

தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் மூலம் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற்பத்தி செய்யும் திட்டம்.

240— *வினா எண். 19768) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் வாயிலாக இராம நாதபுரம் மாவட்டத்தில் சிமெண்ட் குழாய்கள், கிராதிகள் உற் பத்திசெய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை. ஆனால், தமிழ் நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் திருச்சி மாவட் டத்தில் மாயனூரில் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய் களைத் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருக் கிறது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆலங் குளம் சிமெண்ட் பாக்டரியில் தயாராகிற சிமெண்ட் நல்ல தரமுள்ள சிமெண்ட் என்று முடிவு வந்திருக்கிறது. இன்றைக்கு நம்முடைய தமிழக அரசாங்கம் கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கவும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் மிகவும் முனைந்து தீவிரமாக காரியங்களை செய்து கொண்டிருக் கிற இந்த நேரத்திலே அந்த சிமெண்ட்டை வைத்து குழாய்களைத் தயாரிக்கவும், கிராதிகளைத் தயாரிக்கவும் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரியில் வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு குடிநீர் வாரியத்தினுடைய தேவைகளை ஈடேற்றுகிற நோக்கத்துடன் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் அழுத்தக் குழாய்களை தயாரிப்பதற்காக கிட்டத்தட்ட

1984 மார்ச் 9]

36 ஆயிரம் டன் மதிப்புள்ள அளவிற்கு உற்பத்தி செய்ய 'டான்சம்' என்று சொல்லப்படுகிற தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்தினுடைய பிரிவின் கீழ் திருச்சி மாவட்டத்தில் அதை மேற்கொள்ள அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேற்கொண்டும் அத்தகைய பைப்-லைன்ஸ் தேவையா என்பதை ஆராய்ந்து அந்த அடிப்படையில் அரசு இதுகுறித்து ஆராயும்.

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மாயனூரில் சிமெண்ட் குழாய்கள் மற்றும் கிராதிகள் தயாரிக்க பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது ? அந்தத் திட்டம் எப்போது முடிவடையும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மதிப்பிடப்பட்டிருக்கிற முதலீடு ஏழு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய். 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாத வாக்கில் பணி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூடலூர் தாலுகாவிலுள்ள தங்கச் சுரங்கங்கள்.

241—* வினா. எண். 20559—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடலூர் தாலுக்காவில் தங்கச் சுரங்கங்கள் மூடப்பட்டு விட்டது உண்மையா?

(ஆ) ஆம், எனில் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இங்கு சுரங்கப் பணிகள் மீண்டும் துவக்கப்பட்டால் இலாபகரமாயிராது என்பதால் அதை மீண்டும் செயல்படுத்தும் திட்டத்திற்கான வாய்ப்பு இல்லை.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கச் சுரங்கம் மூடப்பட்டுவிட்டதாக அறிவிக்கிறார்கள். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது அதைத் துவக்குவதற்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டது, அது நமக்கு வெற்றிகரமாக வராததற்கு என்னென்ன காரணங்கள் சாதகமாக இல்லை என்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.